# மாலைக்கதிர்

Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 வைகாசி 22 வியாழக்கிழமை 05.06.2025 கதிர் 216










# செம்மணி மனிதப் புதைகுழிக்கு சர்வதேசக் கண்காணிப்பு தேவை

## இன்று பெரும் கவனயீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 5

**யாழ்ப்பாணம், செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் சர்வதேசக் கண்காணிப்புடனும், சர்வதேச நியமங்களைப் பின்பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்தி இன்று வியாழக்கிழமை கவனயீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.**

யாழ். அரியாலை, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயானத்தில் அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வரும் மனிதப் புதைகுழியில் சிசுவின் எலும்புக்கூடு உட்பட 13 எலும்புக்கூடுகள் அடையாளம் காணப்பட்டுள்ளன. இந்தப் புதைகுழி பாரியதாக இருக்கலாம் எனப் பலரும் அச்சம் வெளியிட்டு வருகின்ற நிலையில், வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளின் ஏற்பாட்டில் இன்று காலை 10 மணியளவில் செம்மணி வளைவுக்கு அருகில் செம்மணி மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் சர்வதேசக் கண்காணிப்புடனும், சர்வதேச நியமங்களைப் பின்பற்றியும் மேற்கொள்ளப்பட வேண்டும் என்று வலியுறுத்திக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

"செம்மணிப் புதைகுழிக்கு நீதி வேண்டும், மறைக்காதே மறைக்காதே புதைகுழிகளை மறைக்காதே, எங்கே எங்கே உறவுகள் எங்கே, இனப்படுகொலைக்குச் சர்வதேச விசாரணை வேண்டும்" என எழுதப்பட்ட பல்வேறு பதாகைகளைப் தாங்கி நின்றவாறு போராட்டக்காரர்கள் கோஷமிட்டனர்.

இதில் வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள், யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், அரசியல் செயற்பாட்டாளர்கள், பொதுமக்கள் உட்படப் பலரும் கலந்து

7 ➤






## ஈ.பி.டி.பியிடம் நேரில் சென்று ஆதரவு கோரிய தமிழரசுக் கட்சி



யாழ்ப்பாணம், ஜூன் 5

உள்ளூராட்சி சபைகளில் ஆட்சி அமைப்பதற்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியிடம் நேரடியாகச்சென்று இலங்கைத் தமிழரசுக் கட்சி ஆதரவைக் கோரியுள்ளது.

7 ➤

## முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ஏழரை மணித்தியாலங்கள் வாக்குமூலம்

கொழும்பு, ஜூன் 5

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

சீனாவில்இருந்துதரமற்றஉரங்களை இறக்குமதி

7 ➤



## உரும்பிராயில் சிவகுமாரனின் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஜூன் 5

தமிழின விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த முதல் தியாகி பொன். சிவகுமாரனின் 51 ஆவது நினைவு தினம் இன்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், உரும்பிராய் பகுதியில் அமைந்துள்ள பொன். சிவகுமாரனின் நினைவுத் தூபியில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது சுடர் ஏற்றப்பட்டு, பொன். சிவகுமாரனின் உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டு

7 ➤

## குருந்தூர்மலையில் கைது செய்யப்பட்ட இரு விவசாயிகளும் இன்று விடுவிப்பு!

### வழக்கும் நீதிமன்றால் தள்ளுபடி

முல்லைத்தீவு, ஜூன் 5

முல்லைத்தீவு மாவட்டம், குருந்தூர்மலை பகுதியில் விவசாய நடவடிக்கைகளின் ஈடுபட்டிருந்த வேளை கைது செய்யப்பட்ட இரண்டு விவசாயிகளும்

7 ➤



# நிறைவுகாண் வைத்திய தொழில் வல்லுனர் ஒன்றியம் இன்று வேலைநிறுத்தம்!

கொழும்பு, ஜுன் .05

நிறைவுகாண் வைத்திய தொழில் வல்லுனர் ஒன்றியம் இன்று (05) வேலைநிறுத்தப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

இணை சுகாதாரப் பிரச்சினை, பதவி உயர்வு உள்ளிட்ட பல கோரிக்கைகளை வலியுறுத்தி குறித்த போராட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.

தமது பிரச்சினைகளுக்கு சுகாதார அமைச்சு தீர்வுகளை வழங்காத காரணத்தினால் நாடு முழுவதும் உள்ள அனைத்து வைத்தியசாலைகளிலும் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க தீர்மானித்ததாக நிறைவுகாண் தொழில் மருத்துவ வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர்.

குறித்த பிரச்சினையைத் தீர்ப்பது தொடர்பான கலந்துரையாடலை அமைச்சர் தவிர்த்து வருவதாகவும், நிறைவுகாண் வைத்திய சேவையின் பதவி உயர்வுகள் தொடர்பாக வாக்குறுதியளிக்கப்பட்ட தீர்வுகளை வழங்க இதுவரை எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்றும் வைத்திய தொழில் வல்லுனர் ஒன்றியத்தின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்திருந்தார்.

அதன்படி இன்று காலை 8.00 மணி முதல் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக நிறைவுகாண் மருத்துவ தொழில் வல்லுநர்கள் ஒன்றியத்தின் செயலாளர் சானக தர்மவிக்ரம தெரிவித்தார்.

எனினும் புற்றுநோய் வைத்தியசாலை, மகப்பேறு மற்றும் சிறுவர் வைத்தியசாலை, சிறுநீரக வைத்தியசாலை மற்றும் மத்திய இரத்த வங்கி உள்ளிட்டவை இந்த வேலைநிறுத்தத்தில் ஈடுபடவில்லை என்று கூறப்படுகிறது.

# ரயிலில் மோதி தம்பதியினர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜுன் .05

தெஹிவளை ரயில் பாதையில் பயணித்த தம்பதியினர் கொழும்பு கோட்டையில் இருந்து அளுத்கம நோக்கி பயணித்த ரயிலில் மோதி உயிரிழந்துள்ளதாக தெஹிவளை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விபத்து சம்பவம் நேற்று (04) மாலை இடம்பெற்றுள்ளது.

பதுளை, பதுலுபிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 58 மற்றும் 59 வயதுடைய இருவரே சம்பவத்தின் போது உயிரிழந்துள்ளனர்.

குறித்த இருவரின் சடலங்களும் களுபோவில வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தெஹிவளை பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



# சமுர்த்தி வங்கிகளின் கணக்காய்வுக்கான புதிய சட்டமூலம்!

*கொழும்பு, ஜுன் .05*

*சமுர்த்தி சட்டத்தை திருத்துவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.*

*அதன்படி இதற்கான சட்ட மூலத்தை கிராமிய அபிவிருத்தி, சமூகப் பாதுகாப்பு மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு சமர்ப்பித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.*

*மேற்படி சட்டமூலத்திற்கு அமைவாக, தேசிய கணக்காய்வு சட்ட விதிகளின் கீழ் சமுர்த்தி சமூக வங்கிகளின் கணக்குகள் மற்றும் சமுர்த்தி சமூக வங்கி சங்கங்களின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.*

*குறித்த சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு நிறைவேற்றப்பட்ட பிறகு சமுர்த்தி திருத்தச் சட்டம் என்று பெயரிடப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# யாழ். பல்கலையில் சிவகுமாரனின் நினைவேந்தல்



யாழ்ப்பாணம், ஜுன் 5

தமிழினத்தின் விடுதலைக்கான முதல் தற்கொடையாளர் தியாகி பொன்னுத்துரை சிவகுமாரனின் 51ஆவது ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தில் இன்று நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழக வளாகத்தில் இன்று மதியம் நடைபெற்ற நினைவேந்தல் நிகழ்வில் தியாகி பொன். சிவகுமாரனின் திருவுருவப் படத்துக்கு மாணவர்கள் மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தினர்.

தியாகி பொன். சிவகுமாரன், தமிழ் மாணவர்களுக்குத் தரப்படுத்தல் மூலம் திணிக்கப்பட்ட ஒடுக்குமுறைக்கு எதிராகவும், தமிழர்களின் உரிமைகளை மீட்பதற்காகவும் கிளர்ந்தெழுந்து ஆயுதம் ஏந்திப் போராடினார். அதனால் பொலிஸாரால் தேடப்பட்டு வந்த பொன்.சிவகுமாரன் கடந்த 1974ஆம் ஆண்டு ஜுன் மாதம் 5ஆம் திகதி யாழ். உரும்பிராய் பகுதியில் பொலிஸாரின் சுற்றிவளைப்பினுள் சிக்கிக்கொண்டபோது சயனைட் அருந்தி தன் உயிரை மாய்த்துக்கொண்டார்.

ஈழப் போராட்ட வரலாற்றில் முதன் முதலாக சயனைட் அருந்தி உயிர் நீத்தவர் இவர் என்பது குறிப்பிடத்தக்கது.

SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பிவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிமை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# வாழைச்சேனை மீனவர்களால் தாக்குதல்: புல்மோட்டையில் ஆர்ப்பாட்டம்





கொழும்பு, ஜூன் .05

திருகோணமலை, திருக்கடலூர் மீனவர் வாழைச்சேனை மீனவர்களால் தாக்கப்பட்டதை கண்டித்தும்,தாக்குதலில் ஈடுபட்டவர்களை உடனடியாக கைது செய்யுமாறு கோரிக்கை விடுத்தும் திருகோணமலை புல்மோட்டை பிரதான வீதியை மறித்து மீனவர்கள், வியாழக்கிழமை (05) காலை 8 மணி முதல் ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

இவ் ஆர்ப்பாட்டத்தை அடுத்து திருகோணமலை பொலிஸார் விரைந்து செயல்பட்டு தாக்குதலில் ஈடுபட்ட படகு மற்றும் அதன் உரிமையாளரை வாழைச்சேனையில் வைத்து கைது செய்தனர். இதனை அடுத்து 11.30 மணிக்கு போராட்டம் நிறைவடைந்தது. திரு கடலூரில் இருந்து 6 மீனவர்கள் இரண்டு வெளியிணைப்பு படகுகளில் இலங்கைத்துறை கடற்பகுதிக்கு வழமை போன்று தொழிலுக்காக செவ்வாய்க்கிழமை (03) சென்றனர். அப்போது அங்கு வந்த வாழைச்சேனையை சேர்ந்த மீனவர்களின் பாரிய விசைப்படகு இந்த சிறிய படகுகளில் ஒன்றின் மீது வேண்டுமென்றே மோதியுள்ளது. இதனால் படகு சேதமடைந்து கவிழ்ந்துள்ளது. அதில் இருந்த மீனவர் கடலில் விழுந்துள்ளனர். அப்போது விசைப்படகில் வந்தவர்கள் பாதிக்கப்பட்ட மீனவர்களை வாள்,பொல்லுகள் கொண்டு தாக்கியுள்ளனர்.

உயிராபத்தான நிலையில் இருந்த மீனவர் உதவி கோரி சத்தம் எழுப்பியபோது இன்னு மொரு விசைப்படகில் வந்தவர்கள் இவர்களை காப்பாற்றி திருகோணமலைக்கு புதன்கிழமை (04) பாதுகாப்பாக அழைத்து வந்துள்ளனர்.

இத்தாக்குதலில் காயமடைந்த மீனவர் ஒருவர் திருகோணமலை பொது வைத்தியசாலையின் விசேட சிகிச்சை பிரிவில் புதன்கிழமை (05) அனுமதிக்கப்பட்டார்.

படகு கவிழ்ந்தமையினால் மொத்தமாக 21 லட்சம் ரூபாய்பெறுமதியான வெளியிணைப்பு இயந்திரம்,வலைகள் உற்பட மீன்பிடி உபகரணங்கள் மற்றும் படகு என்பன பாரிய சேதமடைந்துள்ளதாக பாதிக்கப்பட்ட மீனவர் கூறினார். (ஐ)

# தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பசுமை காடாக்கல் செயற்றிட்டம்!

தேசிய சுற்றாடல் வாரம் மற்றும் தேசிய சுற்றாடல் தினத்தை முன்னிட்டு பசுமை காடாக்கல் செயற்றிட்டம் இன்று (05) ஆரம்பிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாவட்ட அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் தலைமையில் யாழ்ப்பாணம் பழைய பூங்கா வளாகத்தில் குறித்த நிகழ்வு ஆரம்பிக்கப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு 450 மரக்கன்றுகளை கிறீன் லேயர் நிறுவனத்தினர் இலவசமாக வழங்கியுள்ளனர்.

நிகழ்வில் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவின் பிரதிப்பணிப்பாளர் ரி.என்.சூரியராஜா, மாவட்ட செயலக அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் முதலானோர் கலந்துகொண்டு மரங்களை நாட்டி வைத்தனர்.

# கழுத்து நெரித்து பெண் கொலை!

## வீட்டில் இருந்த தங்க நகைகளும் மாயம்

வத்தளை, ஜூன் 5

வத்தளை - மஹாபாகே பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கெரகஹபொக்குன பிரதேசத்தில் உள்ள வீடு ஒன்றில் கழுத்து நெரித்துப் பெண் ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் நேற்று புதன்கிழமை இடம்பெற்றுள்ளது.

மஹாபாகே, கெரகஹபொக்குன பிரதேசத்தைச் சேர்ந்த 63 வயதுடைய பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார்.


சம்பவத்தையடுத்து வீட்டில் இருந்த தங்க நகைகளும் காணாமல்போயுள்ளன என்று பொலிஸ்விசாரணையில்தெரியவந்துள்ளது.

கொலையாளி வீட்டில் இருந்த தங்க நகைகளைத் திருடிச் சென்றிருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இந்நிலையில், கொலை செய்யப்பட்ட பெண்ணின் சடலம் ராகமை வைத்திய சாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கொலையாளி தொடர்பில் இதுவரை எந்தவித தகவல்களும் கண்டறியப்படவில்லை.

இது தொடர்பில் மஹபாகே பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# நாட்டில் சட்டவிரோத இஸ்ரேலிய மத மையங்கள்



கொழும்பு, ஜூன் .05

இலங்கையில் நான்கு இஸ்ரேலிய மத மையங்கள் இயங்கி வருவதாகவும், அவற்றில் இரண்டு பதிவு செய்யப்படவில்லை என்றும் மத மற்றும் கலாசார விவகார அமைச்சர் ஹினிதும சுனில் செனவி இன்று வியாழக்கிழமை (05) பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள பொத்துவில் மற்றும் திம்பிரிகஸ்யாயவில் அமைந்துள்ள இஸ்ரேலிய மத மையங்கள் மத இடங்களாக பதிவு செய்யப்படவில்லை என்றும், வெலியோகம மற்றும் எல்லாவில் உள்ள இஸ்ரேலிய மத மையங்கள் நிறுவனங்கள் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளன என்றும் அவர் குறிப்பிட்டார்.

கடந்த ஆண்டு டிசெம்பரில் பிரதமரிடமிருந்து கேள்விகள் எழுப்பப்பட்ட பிறகும், தெஹிவளை மற்றும் கொழும்பு 7இல் இஸ்ரேலிய மத மையங்களாக செயல்படும் அங்கீகரிக்கப்படாத கட்டமைப்புகளுக்கு வழங்கப்பட்ட எஸ்.டி.எஃப் மற்றும் பொலிஸ் பாதுகாப்பை அரசாங்கம் அகற்றவில்லை என்று பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் கூறினார்.

இருப்பினும், கொழும்பு-7, சித்தம்பலம் கார்டினர் மாவத்தையில் உள்ள மையத்திற்கு வழங்கப்பட்ட எஸ்.டி.எஃப் பாதுகாப்பு தற்போது அகற்றப்பட்டுள்ளதாக அமைச்சர் ஹினிதும சுனில் செனவி கூறினார். (ஐ)

# ”250 ரூபாய்க்கு உப்பு விற்க முயற்சிக்க வேண்டாம்”

இறக்குமதியாளர்கள் இறக்குமதி செய்யப்பட்ட உப்பை அதிக விலைக்கு விற்க முயற்சித்தால், இந்த வாரத்திற்குள் உப்புக்கான அதிகபட்ச சில்லறை விலையை அறிவிக்க வேண்டிய கட்டாயம் ஏற்படும் என்று வர்த்தக அமைச்சர் வசந்த சமரசிங்க எச்சரித்துள்ளார்.

ஊடகங்களுக்கு உரையாற்றிய அமைச்சர் சமரசிங்க, உள்ளூர் சந்தையில் ஏற்பட்ட பற்றாக்குறை காரணமாகவே அரசாங்கம் உப்பு இறக்குமதி செய்ய அனுமதித்ததாகவும், இறக்குமதியாளர்கள் லாபத்தை அடிப்படையாகக் கொண்டு அதிக விலைக்கு உப்பு விற்பனை செய்வதற்கு அனுமதி இல்லை என்றும் கூறினார்.

இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோ உப்பு ரூ.77 ஆகவும், அரசாங்கம் விதிக்கும் 40 வரியுடன் சேர்த்து விலை நிர்ணயம் செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

“ஒரு கிலோவுக்கு ரூ. 80 விலை நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம். பின்னர், மொத்த வியாபாரிகள் ரூ. 10, 20 அல்லது 30 லாபத்தை வைத்திருக்க அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் இந்த வரம்பைத் தாண்டிச் செல்லக்கூடாது. இருப்பினும், இறக்குமதியாளர்கள் இந்தப் பற்றாக்குறையைப் பயன்படுத்தி ஒரு மோசடியை உருவாக்க முயற்சித்தால், அத்தகைய செயல்களில் ஈடுபட வேண்டாம் என்று நான் அவர்களை எச்சரிக்க விரும்புகிறேன். இது தொடர்ந்தால் அதிகபட்ச சில்லறை விலையை விதிக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்போம்,” என்று அவர் கூறினார்.

இறக்குமதியாளர்கள் ரூ.80 மதிப்புள்ள ஒரு கிலோ இறக்குமதி செய்யப்பட்ட உப்பை ரூ.250க்கு விற்க முயற்சிக்க வேண்டாம் என்று அமைச்சர் சமரசிங்க மேலும் எச்சரித்தார்.

“இறக்குமதி செய்யப்பட்ட உப்பு ரூ. 110 அல்லது ரூ. 120 க்கு விற்கப்பட்டாலும் பரவாயில்லை. அந்த லாபம் போதுமானது. உப்பு இறக்குமதி தற்போதைய பற்றாக்குறையை நிவர்த்தி செய்ய மட்டுமே அனுமதிக்கப்பட்டது, இறக்குமதியாளர்கள் லாபம் ஈட்டுவதற்காக அல்ல. இறக்குமதியாளர்களுக்கு இதை மீண்டும் வலியுறுத்த விரும்புகிறோம். அத்தகைய லாபம் பெற நாங்கள் அனுமதிக்க மாட்டோம்,” என்று அவர் மேலும் கூறினார். (ஐ)



# பா.ம.க., நிறுவனர் ராமதாசை சந்தித்தது ஏன்? ஆடிட்டர் குருமூர்த்தி பேட்டி



"பா.ஜ.,வுக்காக பேச வரவில்லை. நண்பர் என்ற முறையில் டாக்டர் ராமதாசை சந்தித்து பேசினேன்" என 3 மணி நேர பேச்சுவார்த்தை முடிவில், நிருபர்கள் சந்திப்பில் ஆடிட்டர் குருமூர்த்தி தெரிவித்தார்.

பா.ம.க., நிறுவனர் ராமதாசுக்கும், அவரது மகனும் கட்சித் தலைவருமான அன்புமணிக்கும் இடையிலான மோதல் தீவிரமடைந்துள்ள நிலையில், இருவரும் தனித்தனியாக செயல்பட்டு வருகின்றனர். தைலாபுரம் இல்லத்தில் பா.ம.க., நிறுவனர் ராமதாசை நேரில் சந்தித்து அன்புமணி பேசினார்.

இதற்கிடையே ராமதாசுடன் ஆடிட்டர் குருமூர்த்தி சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அப்போது அ.தி.முக.,வை சேர்ந்த சைதை துரைசாமி உடன் இருந்தார். ராமதாஸ் உடன் 3 மணி நேரமாக குருமூர்த்தி பேச்சுவார்த்தை நடத்தினார்.

பின்னர் நிருபர்கள் சந்திப்பில் குருமூர்த்தி கூறியதாவது: பா.ஜ.,வுக்காக பேச வரவில்லை. நீண்ட கால நண்பர் ராமதாஸ். எனது நீண்ட கால நண்பர் ராமதாசை சந்தித்து பேசினேன்.வேறு ஏதும் இல்லை.

நட்பு ரீதியாக சந்தித்து நீண்ட நேரமாக பேசினேன். பா.ஜ,வுக்காக நான் தைலாபுரம் வரவில்லை. நண்பர் என்ற முறையில் சந்திக்க வந்தேன். இவ்வாறு அவர் கூறினார்.

டாக்டர் ராமதாஸ் மற்றும் அன்புமணி இடையே சமாதானம் பேச வந்தீர்களா என்ற கேள்விக்கு இல்லை என்று ஆடிட்டர் குருமூர்த்தி பதில் அளித்தார்.(ஐ)

# பெங்களூரில் வெற்றி கொண்டாட்டத்தில் நிகழ்ந்த சோகம்: பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல்



பெங்களூரு கிரிக்கெட் அணியின் வெற்றிக் கொண்டாட்டத்தில் ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு பிரதமர் மோடி உள்ளிட்ட தலைவர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

சாம்பியன் கோப்பையுடன் திரும்பிய பெங்களூரு அணி வீரர்களை காண ஒரே சமயத்தில் நூற்றுக்கணக்கான ரசிகர்கள் கூடியதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதில், சிக்கி 11 பேர் உயிரிழந்தனர். மேலும் பலரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்துக்கு தலைவர்கள் இரங்கல் தெரிவித்து உள்ளனர்.

பெங்களூரு மைதானத்தில் ஏற்பட்ட துயரமான சம்பவத்தில் உயிரிழப்பு ஏற்பட்டது அதிர்ச்சி அளிப்பதாகவும், மனதை நொறுங்கச் செய்வதாகவும் உள்ளது. உயிரிழந்தவர்களின் குடும்பத்திற்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய கடவுளை வேண்டுகிறேன்.

பெங்களூருவில் நடந்த விபத்து மிகவும் வேதனையளிக்கிறது. இந்த துயரமான நேரத்தில், தங்கள் அன்புக்குரியவர்களை இழந்த அனைவருடனும் எனது எண்ணங்கள் உள்ளன. காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறேன்.

பெங்களூரு சின்னசாமி மைதானம் அருகே வெற்றி கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசல் சம்பவம் மனதை உலுக்குகிறது. உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு இரங்கல் தெரிவித்துக் கொள்கிறேன். காயமடைந்த அனைவரும் விரைவில் குணமடைய வேண்டும்.

இந்த துயரமான நேரத்தில் பெங்களூரு மக்களுக்கு ஆதரவாக நான் நிற்கிறேன். பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு அனைத்து உதவிகளையும் கர்நாடக அரசு வழங்க வேண்டும். இந்த சோகம் ஒரு வேதனையான நினைவூட்டல். எந்தவொரு கொண்டாட்டமாக இருந்தாலும் பாதுகாப்பு நெறிமுறைகளை கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டும்.

சின்னசாமி ஸ்டேடியம் அருகே நடைபெற்ற வெற்றி கொண்டாட்டத்தின் போது ஏற்பட்ட கூட்ட நெரிசல் சம்பவம் மிகுந்த அதிர்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. மகிழ்ச்சியின் ஒரு தருணத்தை துக்கம் மறைத்துவிட்டது. உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும். வெற்றி அணிவகுப்பை அனுமதிக்காமல் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, ஆனால் மைதானத்திற்கு அருகில் மக்கள் கூட்டம் அலைமோதியது இந்த துயரத்திற்கு வழிவகுத்தது. எப்போதும் பாதுகாப்பிற்கு முன்னுரிமை அளிக்குமாறு அனைவரையும் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அளவு கடந்த கூட்டம் வரும் என்பதை கணித்து அதற்கேற்ப பாதுகாப்பு ஏற்பாடுகளை செய்திருக்க வேண்டும். இல்லாவிட்டால் வெற்றிக் கொண்டாட்டத்தை இன்னும் சில நாட்களுக்கு தள்ளி வைத்திருக்க வேண்டும். இவற்றைச் செய்யத் தவறிய கர்நாடக அரசும், ஆர்சிபி அணி நிர்வாகமும் தான் உயிரிழப்புகளுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

பெங்களூரு அணி வீரர்களை பார்க்க குவிந்த கூட்டத்தில் சிக்கி 11 பேர் உயிரிழந்த சம்பவத்திற்கு கர்நாடக முதல்வர் தனிப்பட்ட முறையில் பொறுப்பேற்று இதில் தொடர்புடையவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இது குறித்து கர்நாடக துணை முதல்வர் சிவகுமார் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: சின்னசாமி ஸ்டேடியம் அருகே இன்று நடந்த துரதிர்ஷ்டவசமான சம்பவத்தில் காயமடைந்தவர்களை நேரில் சந்தித்து ஆறுதல் தெரிவித்தேன். இந்த கடினமான தருணங்களில் பாதிக்கப்பட்டவர்களிடம் பேசும்போது வருத்தமாக இருந்தது.

மருத்துவ வசதி உள்ளிட்ட அனைத்து உதவிகளும் அரசு செய்யும் என அவர்களிடம் உறுதியளித்தேன். காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய வேண்டும். (ஐ)

# தென் மாநிலங்களை ஒருங்கிணைக்கும் ஸ்டாலின் முயற்சிக்கு வேட்டு வைக்குமா? கமல் பேச்சு குறித்து தி.மு.க., கலக்கம்



'தமிழிலிருந்து பிறந்ததுதான் கன்னடம்' என, கமல் கூறியது, மத்திய பா.ஜ., அரசுக்கு எதிராக, தென் மாநிலங்களை ஒருங்கிணைக்கும் முதல்வர் ஸ்டாலினின் முயற்சிக்கு வேட்டு வைத்து விடுமோ என, தி.மு.க.,வினரிடம் கலக்கம் ஏற்பட்டுள்ளது.

கடந்த மே 24ம் தேதி, சென்னையில் நடந்த, தக் லைப் திரைப்பட வெளியீட்டு விழாவில் பேசிய நடிகரும், மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவருமான கமல், 'தமிழில் இருந்து பிறந்ததுதான் கன்னடம்' என்றார். இது கர்நாடகாவில் பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

கமல் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்த கர்நாட்க முதல்வர் சித்தராமய்யா, 'கன்னட மொழிக்கு மிக நீண்ட வரலாறு உண்டு. அது கமலுக்கு தெரியாது' என்றார். கர்நாடக முன்னாள் முதல்வர் எடியூரப்பா உள்ளிட்ட எதிர்க்கட்சித் தலைவர்களும், கன்னட அமைப்பினரும், கமல் மன்னிப்பு கேட்க வலியுறுத்தி வருகின்றனர்.

கர்நாடக உயர் நீதிமன்றமும், இதே கருத்தை தெரிவித்துள்ளதால், இந்த விவகாரம் விஸ்வரூபம் எடுத்துள்ளது. கமலுக்கு எதிராக, கர்நாடக முதல்வர் உள்ளிட்டோர் கருத்து தெரிவித்துள்ள நிலையில், முதல்வர் ஸ்டாலின் எதுவும் தெரிவிக்காமல் மவுனமாக இருந்து வருகிறார்.

தமிழில் இருந்துதான் மற்ற திராவிட மொழிகள் தோன்றின என்பது, தி.மு.க., எப்போதும் பேசி வருவதுதான். சினிமா வெளியீட்டு விழாவில் கமல் பேசியதால், படத்திற்கு தடை விதித்து பெரிய பிரச்னையாக்கி உள்ளனர்.

மத்திய பா.ஜ., அரசை கடுமையாக எதிர்த்து வரும் முதல்வர் ஸ்டாலின், எதிர்க்கட்சிகள் ஆளும் கர்நாடகா, கேரளா, தெலுங்கானா ஆகிய தென் மாநிலங்களை ஒருங்கிணைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளார்.

கன்னட மொழி பற்றிய சர்ச்சை கமலுக்கு அமைச்சர் சப்போர்ட் மயஅயடாயளயெ; அளைைவநச நொசர; மயயெனய டயபெரயபந ச

அதற்கு கிடைத்த முதல் வெற்றியாக, லோக்சபா தொகுதி மறுவரையறை தொடர்பாக, சென்னையில் முதல்வர் ஸ்டாலின் நடத்திய கூட்டம் அமைந்தது. அதில் கேரளா, தெலுங்கானா முதல்வர்கள், கர்நாடக துணை முதல்வர் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

மாநில கவர்னர்களின் அதிகாரம் தொடர்பான தீர்ப்புக்கு விளக்கம் கேட்டு, உச்ச நீதிமன்றத்திற்கு ஜனாதிபதி கடிதம் அனுப்பினார். இது தொடர்பாகவும், தென்மாநில முதல்வர்களுக்கு ஸ்டாலின் கடிதம் அனுப்பினார். இது, மத்திய பா.ஜ., அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தியது.

இச்சூழலில் கமலின் பேச்சால், காங்கிரஸ் ஆளும் கர்நாடகாவில் கொந்தளிப்பு ஏற்பட்டு உள்ளது.

இது தமிழகம் -- கர்நாடகம் இடையே இணக்கமின்மையை ஏற்படுத்தும் வகையில் உள்ளது. இதனால், 'இண்டி' கூட்டணியில் உள்ள கட்சிகளுக்கு இடையே கருத்து மோதலும் ஏற்பட்டுள்ளது. இதனால், மோடி அரசுக்கு எதிராக, தென் மாநிலங்களை ஒருங்கிணைக்கும் முதல்வர் ஸ்டாலினின் முயற்சிக்கு பின்னடைவு ஏற்படும் நிலை ஏற்பட்டுள்ளது. அதனால்தான், இந்த விவகாரத்தில் எதுவும் கூறாமல் ஸ்டாலின் மவுனம் காத்து வருகிறார். இவ்வாறு அவர் கூறினார். (ஐ)

# முத்தமழையும் பச்சைப் புள்ளியும்!

–பத்மா அர்விந்த்




வன்முறைச்செயல்கள் கணக்கற்றவை. ஒருவரைக் காயப்படுத்துவது அல்லது நோவூட்டுவதைக் கண்ணால் பார்த்தோ அல்லது காதால் கேட்டோ புரிந்துகொள்கிறோம். ஆனால், ஒரு சிலர் நுட்பமான செயல்களால் காயப்படுத்தும் போது அதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

சில வாரங்களாக, புகழ்பெற்ற, அதிகாரம் பெற்ற ஒரு கவிஞர் மீது பாலியல் புகார் சொன்ன ஒரே காரணத்திற்காக ஒரு பாடகி மீது போடப்பட்ட தடை உத்தரவுகளைப்பற்றிய பேச்சு மேலெழும்பிக் கொண்டிருக்கிறது. பலரும் திரும்பத் திரும்பக் கேட்கும் ஒரே கேள்வி: "ஏன் இந்த அவதூறுகளை அவர் நிரூபிக்கவில்லை? இத்தனை வருடங்களாகியும் அவரால் ஏன் நிரூபிக்க முடியவில்லை?"

**அமெரிக்க உதாரணம்**

சென்ற வருடம் அமெரிக்காவில் முன்னாள் அதிபர் மீதான ஒரு குற்றச்சாட்டு நிரூபணம் ஆன போதும், இறையாண்மை இடம்கொடுக்கவில்லை என்கிற ஒரே காரணத்திற்காக அவரைத் தேர்தலில் போட்டியிட அனுமதித்தார்கள். அவருக்குச் சிறைத் தண்டனை அளிக்க முடியாது, அவரின் பாதுகாப்புக்குப் பங்கம் வரும், அவருடைய தனிப்பட்ட பாதுகாப்பு வீரர்களையும் சிறையில் போட முடியுமா என்கிற கேள்விகள் வந்தன.

அவர் அந்த வழக்குகள் நடந்தபோது எத்தனை சாட்சியங்களை முடக்கப் பார்த்தார் என்பது முதல், தேர்தலில் வென்றபின் அந்தச் சட்ட வல்லுநர்கள் மீது பழிவாங்கும் நடவடிக்கைகள் என்ன நடந்துகொண்டிருக்கின்றன என்பதும் வரலாறு. அமெரிக்காவிலேயே இப்படி! பில் காஸ்பி வழக்கில் தீர்ப்பு வர எவ்வளவு காலம் தாமதமானது. பாதிக்கப்பட்டவர்கள் ஏன் உடனே சொல்லவில்லை என்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயம்தானே? அப்படியிருக்கும் போது தமிழ்நாட்டில் இது எப்படிச் சாத்தியம்?

**அதிகார மையங்களுக்கு எதிரான நிரூபணம்**

பாலியல் சீண்டல்களை, அத்துமீறல்களை எந்த அடிப்படையில் பதவியில் உள்ளவர்களோடு நெருக்கமாக இருப்பவர்களுக்கு எதிராக நிரூபிக்க முடியும்? வளரும் நிலையில் இருக்கும் ஒருவர், சாதாரணப் பணியில் இருப்பவர்களேகூட தங்கள் மேலதிகாரிகளுக்கு எதிராகப் புகார் கொடுத்தால், அவர்களுக்கான முக்கியத்துவம் குறைக்கப்படும்.

அப்படி இருக்க, கேளிக்கைத்துறையில் திறமை இருந்தும் எப்படி முன்னேற முடியும்? யாரோ ஒருவர் செய்யும் தவறுகளுக்காக ஓர் அப்பாவிப் பெண் தன் வாழ்க்கையை அழித்துக்கொள்வதுதான் தீர்வா? தனக்குப் பிடித்த தொழிலைச் செய்வதை விட்டுவிட வேண்டியதுதானே என எழுதுவதில் உள்ள வன்முறை புரிகிறதல்லவா?

**அதிகாரம் சார்ந்த வன்முறைகள்**

"நாங்கள் பெண்கள் மீதான வன்முறையைக் குறைக்க உதவுகிறோம்" என்று சொல்வதை விட, நான் இங்கே அதிகாரம் சார்ந்த வன்முறைகளைப் பற்றிப் பேச வந்திருக்கிறேன். அவை பாலியல், தம்பதியர் சார்ந்த வன்முறைகள், பின்தொடர்தலால் வரும் வன்முறைகள், குழந்தைகள் மீது செலுத்தப்படும் வன்முறைகள் யாவும் அடங்கும்.

நாங்கள் ஆண், பெண், மாற்றுப்பாலினத்தினர் எனப் பலருக்கும் உதவக் காத்திருக்கிறோம். ஆண்கள் ஒரு காரணத்திற்காக எங்களை அணுகினால், பெண்கள் வேறொரு காரணத்திற்காக அணுகுவார்கள் என்று சொல்லலாம். இது அனைவரையும் உள்ளடக்கி வழிகாட்ட ஏதுவாக்கும்.

**மொழி பயன்பாட்டில் கவனம்**

சில வார்த்தைப் பிரயோகங்களில் கவனம் செலுத்துவது இந்த நுண் அரசியலைத் தடுக்கும். உதவி வேண்டி வருவோரை எளிதில் அணுக வழி செய்யும்.

உதாரணமாக, "நாங்கள் சட்டப்படி உதவி செய்வோம்" என்றால், அஞ்சி விலகிவிடுவோர் பலருண்டு. அதற்காக அவர்கள் தவறு செய்திருக்க வேண்டிய அவசியம் இல்லை. இன்றும் பல நாடுகளில் காவல்துறை அச்சமூட்டுவதாகவே உள்ளது. போடப்படும் பொய்வழக்குகளும் அத்துமீறல்களும் மக்களை, அதிலும் எளிய மக்களை விலகியே வைத்திருக்கின்றன.

அதிலும் அமெரிக்கா மாதிரியான நாடுகளில் சரியான கடவுச்சீட்டு இருந்தாலும்கூட, ஆங்கிலம் சரியாகப் பேசத் தெரியாத, வறுமைக்கோட்டின் கீழே உள்ள மக்கள் அதிகாரிகளைக் கண்டு அஞ்சுவார்கள். எனவே, பேசும் போது, 'சட்டம்', 'காவல்துறை' போன்ற சொற்களைத் தவிர்க்க வேண்டும். மேலும் அவர்கள் மிகவும் நேசிப்பவர்கள் அவர்களைக் காயப்படுத்தி இருந்தாலும்கூட, அவர்கள் சிறைக்குச் செல்வதை விரும்ப மாட்டார்கள். எனவே வேறு என்ன தேர்வுகள் இருக்கின்றன என்பதை நிதானமாகக் கலந்து பேசலாம்.

**Green Dot கோட்பாட்டின் அடிப்படைகள்**

புசநநெ னுழவ கோட்பாடு வன்முறைப் பிரச்சினையை ஒரு புதிய கண்ணோட்டத்தில் பார்க்க உதவுகிறது. இது ஒரு வரைபடத்தில் மூன்று வகை புள்ளிகளைக் கொண்டு சமூகத்தின் நிலையை விளக்குகிறது. இந்த அணுகுமுறையின் சிறப்பு என்னவென்றால், இது தனிநபர்களைக் குற்றம் சுமத்துவதில் கவனம் செலுத்தாமல், மாறாகச் சமூக மாற்றத்தில் கவனம் செலுத்துகிறது. ஒவ்வொரு நபரும் தன் சூழலில் நேர்மறையான மாற்றத்தை ஏற்படுத்த முடியும் என்கிற நம்பிக்கையில் இந்தக் கோட்பாடு கட்டமைக்கப்பட்டிருக்கிறது.

ஒவ்வொரு வன்முறை நிகழ்வும் வரைபடத்தில் ஒரு சிவப்புப் புள்ளியாகக் குறிக்கப்படுகிறது. இந்தச் சிவப்புப் புள்ளிகள் நமது சமூகத்தில் எங்கும் பரவியிருக்கின்றன. ஒரு பெண்ணின் மீது பாலியல் அத்துமீறல் நடக்கும் போது அது ஒரு சிவப்புப் புள்ளி. குழந்தைகள் மீதான வன்முறை ஒரு சிவப்புப் புள்ளி. தம்பதியர் இடையேயான வன்முறை ஒரு சிவப்புப் புள்ளி. ஆனால், இந்தச் சிவப்புப் புள்ளிகளுக்கு அடுத்ததாக வரும் கறுப்புப் புள்ளிகள்தான் பிரச்னையை மோசமாக்குகின்றன.

கறுப்புப் புள்ளிகள் என்பது வன்முறையை மூடிமறைக்கும், அனுமதிக்கும், ஊக்குவிக்கும் நடவடிக்கைகள். அந்த நிகழ்வை மறைக்கும் போது, 'அது பெரிய விஷயம் இல்லை' என்று எடுத்துக் கொள்ளும் போது, 'ஆதாரம் இல்லை' என்று நிராகரிக்கும் போது அவை கறுப்புப் புள்ளிகளாக மாறுகின்றன. இந்தக் கறுப்புப் புள்ளிகள் சமூகத்தில் வன்முறையை இயல்பானதாக ஆக்குகின்றன.

நமது கேளிக்கைத்துறையில் சிவப்புப் புள்ளிகள் அதிகமாக இருக்கலாம் என்பதை ஒப்புக்கொள்ள வேண்டும். ஆனால், அவற்றைச் சுற்றி உருவாகும் கறுப்புப் புள்ளிகள்தான் பிரச்னையை மோசமாக்குகின்றன. 'அவர் பெரிய கலைஞர், இந்தச் சிறிய விஷயங்களைப் பெரிதாக்க வேண்டாம்' என்கிற கருத்து ஒரு கறுப்புப் புள்ளி. 'அவருடைய கலையையும் தனிப்பட்ட வாழ்க்கையையும் தனியாகப் பார்க்க வேண்டும்' என்பதும் கறுப்புப் புள்ளி. பாதிக்கப்பட்ட பாடகியின் மீது தடை உத்தரவு போடுவதும் கறுப்புப் புள்ளியே.



இந்தக் கறுப்புப் புள்ளிகள் அதிகார மையங்களில் மிகவும் பொதுவானவை. 'அவள் ஏன் உடனே சொல்லவில்லை?' என்கிற கேள்வி ஒரு கறுப்புப் புள்ளி. 'அவள் அங்கே போகவே கூடாது' என்பதும் கறுப்புப் புள்ளி. புகார் கொடுப்பவர்களின் வேலை வாய்ப்புகளைப் பறிப்பதும், அவர்களின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்குவதும் கறுப்புப் புள்ளிகள்தான்.

**பச்சைப் புள்ளிகளின் சக்தி**

பச்சைப் புள்ளிகள் வன்முறையைத் தடுக்கும், குறைக்கும், அல்லது ஒதுக்கும் நடவடிக்கைகள். இவை சிறியதாக இருக்கலாம், ஆனால் மிகவும் சக்தி வாய்ந்தவை. பாதிக்கப்பட்ட ஒருவரிடம் 'உன்னுடைய தவறு இல்லை, நான் உன்னை நம்புகிறேன்' என்று சொல்வது ஒரு பச்சைப் புள்ளி. அவர்களின் தேர்வுகளை மதிப்பது, அவர்கள் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமா, வேண்டாமா என்பதை அவர்களே முடிவு செய்ய விடுவது பச்சைப் புள்ளி. சமூக மட்டத்தில் பச்சைப் புள்ளிகள் இன்னும் முக்கியமானவை. வன்முறையை ஆதரிக்கும் கருத்துகளை எதிர்த்துப் பேசுவது, 'அது வேடிக்கையாக இருந்தது' என்கிற மன்னிப்புகளை ஏற்க மறுப்பது, நிறுவனங்களில் பாதுகாப்பான புகார் முறைமைகளுக்கு வாதிடுவது போன்றவை பச்சைப் புள்ளிகள். இந்தப் பச்சைப் புள்ளிகள் சமூகத்தில் பண்பாட்டு மாற்றத்தைக் கொண்டு வருகின்றன.

வன்முறை நடக்கும் போது நாம் மூன்று வகையில் தலையிட முடியும். உடனடி தலையீடு என்பது 'இது சரியில்லை' என்று தெளிவாகச் சொல்வது, பாதிக்கப்பட்ட வரைப்

(7ஆம் பக்கம் பார்க்க..)

# உக்ரைனின் ட்ரோன் தாக்குதலுக்கு ரஷ்யா கடும் பதிலடி கொடுக்கும் சொல்கிறார் அதிபர் டிரம்ப்



உக்ரைனின் ட்ரோன் தாக்குதலுக்கு ரஷ்யா கடும் பதிலடி கொடுக்கும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் தெரிவித்து உள்ளார்.

உக்ரைன் மீது 2022 பிப்.,ல் ரஷ்யா தொடங்கிய போர் மூன்று ஆண்டுகளை கடந்தும் தொடர்கிறது. இரு தரப்புக்கும் இடையே போர் நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ள அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் முயற்சிகள் மேற்கொண்டார்.

ஆனால் இதற்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் ஒப்புக்கொள்ளவில்லை. இருப்பினும் சமீபத்தில் இரு நாடுகளும் பேச்சு நடத்தின. அதில் முடிவு ஏற்படவில்லை. இந்நிலையில் 117 ட்ரோன்களை ஏவி, ரஷ்யாவின் விமானப்படை தளங்களை குறி வைத்து உக்ரைன் தாக்குதல் நடத்தியது. இதில் ரஷ்யாவின் 30 போர் விமானங்கள் சேதமடைந்தன. மேலும் ரஷ்யா - கிரீமியாவை இணைக்கும் பாலத்தையும் குண்டுகள் வைத்து தகர்த்தது.

இந்த சூழ்நிலையில் ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுடன், அமெரிக்க அதிபர் டொனால்டு டிரம்ப் தொலைபேசி வாயிலாக பேசினார். அதன்பின் வெளியிட்டுள்ள செய்தியில்,'உக்ரைனின் தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கப்போவதாக ரஷ்ய அதிபர் கூறியுள்ளார்.

அதனால்இருதரப்புக்கும்இடையேதற்போதைக்கு போர் நிறுத்தம் ஏற்பட சாத்தியமில்லை' என அவர் கூறியுள்ளார். (ஐ)

## நார்வே செஸ் முதல்முறையாக உலக சாம்பியனை வீழ்த்தினார் வைஷாலி



நார்வே செஸ் போட்டியில் தமிழகத்தைச் சேர்ந்த இந்திய வீராங்கனை வைஷாலி, உலக சாம்பியன் ஜு வென்ஜுனை தோற்கடித்தார்.

நார்வேவின் ஸ்டாவஞ்சர் நகரில் சர்வதேச செஸ் ('கிளாசிக்') தொடர் நடக்கிறது. இதில், தமிழகத்தைச் சேர்ந்த இந்திய வீராங்கனை வைஷாலி, தனது 8வது சுற்றில் 5 முறை சாம்பியனான சீனாவின் ஜு வென்ஜுனை எதிர்த்து விளையாடினார். பரபரப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில் ஜு வென்ஜுனை வைஷாலி தோற்கடித்து அசத்தினார்.

உலக சாம்பியனான வென்ஜுனை வைஷாலி தோற்கடிப்பது இதுவே முதல்முறையாகும். இந்த வெற்றியின் மூலம் அவருக்கு ஒரு புள்ளி கிடைத்தது. இன்னும் 2 சுற்றுகள் எஞ்சியுள்ள நிலையில், 6 வீராங்கனைகள் கொண்ட பட்டியலில் வைஷாலி 5வது இடத்தில் உள்ளார். இவர் சீனாவின் லெய் டிங்ஜியை விட அரை புள்ளிகள் பின்தங்கியுள்ளார்.

கடந்த ஆண்டு இதே நார்வே செஸ் போட்டியில் வைஷாலியின் சகோதரர் பிரக்யானந்தா, உலக சாம்பியனான நார்வேவின் மேக்னஸ் கார்ல்சனை முதல்முறையாக தோற்கடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. (ஐ)

## போலி இன்சூரன்ஸ் மூலம் ரூ.1,282 கோடி மோசடி இந்திய வம்சாவளியை சேர்ந்தவர் அமெரிக்காவில் கைது



போலி இன்சூரன்ஸ் மூலம் ரூ.1,282 கோடி மோசடியில் ஈடுபட்டதாக இந்திய வம்சாவளி தொழிலதிபர் அமெரிக்காவில் கைது செய்யப்பட்டார்.

அமெரிக்காவில் சாவரின் ஹெல்த் குரூப் என்ற பெயரில் மருந்து நிறுவனத்தை நடத்தி வருபவர் டன்மாய் ஷர்மா,61. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட ஆராய்ச்சி மனநல மருத்துவராக திகழ்ந்து வரும் இவர், அசாம் மாநிலத்தின் கவுகாத்தியை பூர்வீகமாக கொண்டவராவார். இவர் தெற்கு கலிபோர்னியாவில் போதை மறுவாழ்வு மையங்களை நடத்தி வந்துள்ளார்.

சர்மாவின் சாவரின் ஹெல்த் குரூப் நிறுவனம், நோயாளிகளுக்கு தெரியாமல் அவர்களின் பெயரில் காப்பீட்டுத் திட்டங்களை பதிவு செய்து, ரூ.1,282 காப்பீட்டுத் தொகையை பெற விண்ணப்பித்துள்ளார். இதற்காக அவர் ரூ.180 கோடி லஞ்சம் கொடுத்துள்ளதாகவும் குற்றம்சாட்டப்பட்டுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டின் கீழ், அவரது வீடு மற்றும் மருத்துவ மையங்களில் எப்.பி.ஐ., சோதனை நடத்தியது. இந்த நிலையில், லாஸ் ஏஞ்சல்ஸ் விமான நிலையத்தில் தொழிலதிபர் டான்மாய் ஷர்மாவை அதிகாரிகளை கைது செய்தனர். (ஐ)

## ரூ.40 லட்சம் மதிப்பிலான பிரான்ஸ் அதிபர் மேக்ரானின் மெழுகு சிலை திருட்டு



பிரான்சில் அதிபர் மேக்ரானின் மெழுகு சிலையை போராட்டக்காரர்கள் திருடிய சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

உக்ரைன் மீது ரஷ்யா தொடர்ந்து தாக்குதல் நடத்தி வருகிறது. இதனிடையே, ரஷ்யாவுடன் பிரான்ஸ் பொருளாதார உறவைக் கண்டித்து கிரீன்பீல் என்ற அமைப்பின் ஆதரவாளர்கள் போராட்டத்தை நடத்தி வருகின்றனர். மேலும், ரஷ்யாவுடன் அணுசக்தி ஒப்பந்தத்தை முழுமையாக துண்டிக்காத பிரான்ஸ் அதிபர் இமானுவல் மேக்ரானுக்கு எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர்.

இதன் ஒரு பகுதியாக, கிரெவின் அருங்காட்சியகத்தில் வைக்கப்பட்டிருந்த பிரான்ஸ் அதிபர் மேக்ரானின் மெழுகு சிலையை போராட்டக்காரர்கள் திருடிச் சென்றுள்ளனர். இதன் மதிப்பு ரூ.40 லட்சமாகும். ரஷ்ய தூதரகத்திற்கு எதிரே அந்த மெழுகுசிலையை வைத்த அவர்கள், 'புடின் மற்றும் மேக்ரான் கதிரியக்கக் கூட்டாளிகள்', என்ற பெயர் பலகையையும் வைத்தனர். இது குறித்து தகவல் அறிந்து சென்ற போலீசார், சிலையை மீட்டு மீண்டும் அருங்காட்சியகத்திடம் ஒப்படைத்தனர்.

உக்ரைன் உடனான போருக்குப் பிறகு, ரஷ்யாவில் இருந்து பிரான்ஸ் இறக்குமதியை அதிகரித்துள்ளது. குறிப்பாக, 2021ம் ஆண்டை காட்டிலும் 2023ல் உரங்களின் இறக்குமதி 80 சதவீதம் அதிகரித்துள்ளதாக கிரீன்பீஸ் அமைப்பு தெரிவித்துள்ளது. (ஐ)

## இந்தியா குறித்து பிலாவல் பூட்டோ உளறல்: ஆதாரத்துடன் பதிலடி கொடுத்த பத்திரிகையாளர்



ஐ.நா.,வில் இந்தியா குறித்து ஆதாரமற்ற வகையில் பாகிஸ்தான் முன்னாள் வெளியுறவு அமைச்சர் பிலாவல் பூட்டோ பேட்டி கொடுக்க, அதனை அங்கிருந்த பத்திரிகையாளர் ஒருவர் ஆதாரத்துடன் பதிலடி கொடுத்துள்ளார்.

'ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கையை தொடர்ந்து, பயங்கரவாதிகளை வளர்த்தெடுக்கும் பாகிஸ்தானின் முகத்தை தோலுரித்து காட்டவும், இந்தியாவின் நிலைப்பாடு என்ன என்பதை புரிய வைக்கவும் 33 நாடுகளுக்கு அனைத்து கட்சி எம்பிக்கள் குழுக்களை இந்தியா அனுப்பி வைத்தது.

இந்தியாவை ' காப்பியடித்து' பாகிஸ்தானும் குழு ஒன்றை வெளிநாடுகளுக்கு அனுப்பி வைத்து உள்ளது.

அந்த வகையில், அந்நாட்டின் முன்னாள் வெளியுறவு அமைச்சரும். பாகிஸ்தான் மக்கள் கட்சி தலைவருமான பிலாவல் பூட்டோ அமெரிக்கா சென்ற அவர், ஐக்கிய நாடுகள் சபையில் நிருபர்களை சந்தித்தார். அப்போது, இந்தியா மீது ஆதாரமற்ற வகையில் அடுக்கடுக்கான குற்றச்சாட்டுகளை தெரிவித்தார்.

மேலும், இந்தியாவில் வசிக்கும் முஸ்லிம்களை மோசமாக சித்தரிக்க வேண்டும் என்பதற்காக பஹல்காம் தாக்குதல் அரசியல் கருவியாக பயன்படுத்தப்படுவதாக குற்றம்சாட்டினார்.

அப்போது அங்கிருந்த அஹமது பாத்தி என்ற மூத்த பத்திரிகையாளர் அவருக்கு பதிலளித்து கூறும் போது, இரு நாடுகள் சார்பிலும் நடந்த பத்திரிகையாளர் சந்திப்பை பார்த்தேன். அதில் இந்திய தரப்பில் முஸ்லிம் ராணுவ அதிகாரிகள், தாக்குதல் குறித்து விளக்கமளித்தனர் என பதிலடி கொடுத்தார். அவர் ராணுவ அதிகாரி சோபியா குரேஷியின் பேட்டி கொடுத்ததை எடுத்துக் காட்டினார்.

இதற்கு என்ன பதில் சொல்வது என தெரியாத பிலாவல் பூட்டோ, உங்கள் பதில் சரி என்றார். தொடர்ந்து அஹமது பாத்தி அடுத்த கேள்வி கேட்க துவங்குவதற்கு முன்னர், அவரை இடைமறித்த பிலாவல் பூட்டோ, இந்தியா மீது குற்றச்சாட்டுகளை கூறினார். (ஐ)

## செம்மணி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கொண்டனர். இந்தப் போராட்டத்தின் பின்னர் செம்மணி மனிதப் புதைகுழி தொடர்பில் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் அறிக்கை ஒன்றும் வெளியிடப்பட்டது.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

"வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் சங்கமாக, யாழ்ப்பாணம் செம்மணி சித்துப்பாத்தில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் மனிதப் புதைகுழி அகழ்வு தொடர்பாக எமது தீவிர கவனத்தையும், நிலைப்பாட்டையும் வெளியிடுகின்றோம்.

ஏற்கனவே தமிழர் தாயகப் பரப்பிலும் ஸ்ரீலங்காவிலும் 22 க்கும் மேற்பட்ட மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில் மன்னார் ச.தொ.ச. வளாக மனிதப் புதைகுழி, மன்னார் திருக்கேதீஸ்வரம் மனிதப் புதைகுழி கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழிகளின் அகழ்வுகள் நிறைவு பெற்று மிக அண்மைய காலமாகத் தொடர்சியாக வழக்கு விசாரணைகள் இழுத்தடிக்கப்பட்டு இடம்பெற்று வருகின்றதே தவிர இந்த மனிதப் புதைகுழி தொடர்பான உண்மை இன்னும் உரிய வகையில் கண்டறியப்பட்டு நீதி நிலைநாட்டப்படவில்லை. எனவேதான் நாங்கள் உள்நாட்டு நீதிப் பொறிமுறைகளில் நம்பிக்கை இழந்தவர்களாகத் தொடர்சியாக இவ்வாறாகக் கண்டுபிடிக்கப்பட்டு அகழப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பாக சர்வதேச கண்காணிப்பையும், சர்வதேச நீதிப் பொறிமுறையையும் வலியுறுத்தி வருகின்றோம்.

தற்போது வரை செம்மணி சித்துப்பாத்தில் மீட்கப்பட்ட அல்லது அடையாளம் காணப்பட்ட மனித எச்சங்கள் எண்ணிக்கை 13ஐத் தாண்டியுள்ளது. இதில் சிறு குழந்தைகளின் உடல எச்சங்களும் அடங்குவதாக அறிகின்றோம். மிகவும் கொடூரமான முறையில் ஒன்றன்மீது ஒன்றாகப் பலர் கொன்று புதைக்கப்பட்டிருப்பதாக இந்தப் புதைகுழி அகழ்வு வெளிப்படுத்துகின்றது.

ஒரே இடத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட மனித உடல்கள் கண்டெடுக்கப்படும்போது, அந்த இடம் சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப "மனிதப் புதைகுழி" என அடையாளப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகின்றோம். எனவே, செம்மணி சித்துப்பாத்தி இந்து மயான அகழ்விடத்தை உடனடியாக ஒரு "மனிதப் புதைகுழியாக" பிரகடனம் செய்யுமாறும், அதன் அடிப்படையில் அகழ்வுப் பணிகளை மேற்படி மயான வளாகம் முழுவதிலும் அதனை சுற்றியுள்ள பகுதிகளிலும் விரிவுபடுத்துமாறும் நாங்கள் வலியுறுத்துகிறோம்.

மேலும், செம்மணி முழுவதும் போர் இடம்பெற்ற கடந்த காலங்களில் பலர் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டதாக கிரிசாந்தி குமாரசாமி என்ற பாடசாலை சிறுமியின் கொலை தொடர்பான நீதிமன்றங்களில் இடம்பெற்ற வழக்குகளில் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோருக்கான ஆணைக்குழுக்களுக்கு அளிக்கப்பட்ட சாட்சியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே, இந்த அகழ்வு நடவடிக்கை ஒரு தனிப்பட்ட சம்பவமாக அல்லாமல், பெரும் அளவிலான அட்டூழியங்கள் இடம்பெற்ற தரவுகளை வெளிக்கொணரும் முக்கியமான வழியாக காணப்பட வேண்டும். செம்மணியின் பல்வேறு பகுதிகளில் இவ்வாறு வெவ்வேறு மனிதப்புதைகுழிகள் இருக்கலாம் என நாங்கள் நம்புகின்றோம்.

ஆகவே,

1) செம்மணி சித்துப்பாத்தில் இடம்பெறும் அகழ்வு நடவடிக்கையை மனிதப் புதைகுழி விசாரணை என அதிகாரபூர்வமாக அங்கீகரிக்க கோருகின்றோம்.

2) அகழ்வுப் பணிகளைச் சர்வதேச நிபுணர்கள், சர்வதேச சமூகத்தின் மேற்பார்வையுடன், சர்வதேச நியமங்களுக்கு ஏற்ப முன்னெடுக்குமாறு கோருகின்றோம் .

3) மனிதப் புதைகுழி தொடர்பான அனைத்து ஆதாரங்களும் பாதுகாக்கப்பட்டு, வெளிப்படைதன்மையோடு அகழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும் என வேண்டுகோள் விடுகின்றோம்.

4) மனிதப் புதைகுழி அகழ்வு நடவடிக்கையை ஊடகங்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட தரப்பினரான காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் சுதந்திரமாக மட்டுப்படுத்தல்கள் இன்றி அறிக்கையிடுவதற்கும் கண்காணிப்பதற்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

5) எதிர்வரும் மாதங்களில் இலங்கைக்கு வருகை தருவார் என எதிர்பார்க்கப்படுள்ள ஐக்கிய நாடுகளின் மனித உரிமை பேரவையின் ஆணையாளர் வடக்குக்குப் பயணம் செய்து செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிட்டு நீதியை நிலைநாட்டுவதற்க உரிய பங்களிப்பை வழங்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றோம்.

கொலைகாரனால் நீதி வழங்க முடியுமா? வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்கு என்ன நடந்தது என்ற உண்மை இவ்வாறு கண்டுபிடிக்கப்படும் மனிதப் புதைகுழிகள் தொடர்பாக விசாரணைகள் மூடி மறைப்புக்கள் இன்றி வெளிப்படைத்தன்மையோடு சர்வதேச சமூகத்தின் பங்கேற்போடு இடம்பெறும்போதுதான் வெளிப்படும் என நாங்கள் வலுவாக நம்புகின்றோம்." - என்றுள்ளது.

## உரும்பிராயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அஞ்சலி செலுத்தப்பட்டது. இன்றைய நினைவேந்தல் நிகழ்வில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் இணைத் தலைவர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே.சிவஞானம், தியாகி பொன். சிவகுமாரனின் சகோதரி உள்ளிட்ட பலர் கலந்துகொண்டிருந்தனர்.

## குருந்தூர் மலையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இரண்டு விவசாயிகளும் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தொடர்ச்சியாக வழக்கு விசாரணை இடம்பெற்று வந்தது.

இந்நிலையில், இந்த வழக்கு இன்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது சந்தேகநபர்களான விவசாயிகள் இருவரையும் வழக்கில் இருந்து விடுவித்து முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் கட்டளையாக்கியுள்ளது.

முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்ற நீதிபதி த.பிரதீபன் தனது கட்டளையில், "மேற்படி சந்தேகநபர்கள் மீது வழக்கைத் தொடர்ந்து நடத்தக்கூடிய அடிப்படை முகாந்திரங்கள் இல்லை. குறித்த பிரதேசம் இன்னமும் தொல்பொருள் திணைக்களத்துக்குரிய பிரதேசம் என வர்த்தமானியில் பிரசுரிக்கப்படவில்லை என்பதை வழக்குத் தொடுநர் தரப்பே ஏற்றுக்கொண்டுள்ளது." - என்று குறிப்பிட்டார்.

இந்த வழக்கில் இன்று முல்லைத்தீவு சட்டத்தரணிகள் சங்கத்தின் பத்துக்கும் அதிகமான சட்டத்தரணிகள் சந்தேகநபர்கள் சார்பாகத் தோன்றி வாதிட்டிருந்தார்கள்.

## முன்னாள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

செய்ததால் அரசுக்கு நட்டம் ஏற்பட்டமை தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காக சஷீந்திர ராஜபக்ஷ, இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவில் இன்று வியாழக்கிழமை காலை ஆஜராகியிருந்தார்.

அங்கு சஷீந்திர ராஜபக்ஷ ஏழரை மணித்தியாலங்கள் வாக்குமூலம் வழங்கிய பின்னர் அங்கிருந்து வெளியேறியுள்ளார் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஈ.பி.டி.பியிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேரடியாகவே சந்தித்து ஆதரவு கேட்ட தமிழரசுக் கட்சியின் இந்தக் கோரிக்கையைப் பரிசீலிப்பதாக ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் சி.வி.கே. சிவஞானம் யாழ். நகரில் உள்ள ஈ.பி.டி.பியின் தலைமை அலுவலகத்துக்கு இன்று மாலை நேரில் சென்று ஈ.பி.டி.பியின் செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவைச் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

உள்ளூராட்சி சபைகளில் தமிழரசுக் கட்சி ஆட்சி அமைப்பதற்கு ஈ.பி.டி.பி. ஆதரவை வழங்க வேண்டும் என்று அதன் செயலாளர் நாயகத்திடம் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவர் கோரியுள்ளார்.

இவ்வாறு தமிழரசுக் கட்சியே நேரில் வந்து எம்மைச் சந்தித்துக் கலந்துரையாடி ஆதரவை வழங்குமாறு விடுத்துள்ள கோரிக்கையை ஈ.பி.டி.பி. பரிசீலிப்பதாக டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

# கலை-கலாசார அலுவல்கள் பற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியமொன்றை ஸ்தாபிப்பதற்கான முன்மொழிவு!

கொழும்பு, ஜூன் .05

பத்தாவது நாடாளுமன்றத்தில், கலை-கலாசார அலுவல்கள் பற்றிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றியம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கான முன்மொழிவு சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்னவுக்கு நாடாளுமன்றத்தில் வைத்து நேற்று கையளிக்கப்பட்டது.

தேசிய மக்கள் சக்தியின் கௌரவ நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜகத் மனுவர்ன மற்றும் ருவன் மாபலகம ஆகியோர் இந்த முன்மொழிவை கையளித்தனர்.

நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவின் அடுத்த கூட்டத்தில் குறித்த முன்மொழிவு தொடர்பில் கருத்திற்கொண்டு எதிர்கால நடவடிக்கை எடுப்பதற்காக ஆற்றுப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# முத்தமழையும்........

பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச் செல்வது, வன்முறை நடக்கும் போது கவனத்தை வேறிடம் திருப்புவது போன்றவை. மறைமுக தலையீடு என்பது நம்மால் நேரடியாகச் செயற்பட முடியாத போது பிறரின் உதவியைப் பெறுவது. அதிகாரிகளை அழைப்பது, நண்பர்களின் உதவியைப் பெறுவது, நிறுவன கொள்கைகளைப் பயன்படுத்துவது போன்றவை.

தாமத தலையீடு மிகவும் முக்கியமானது. நிகழ்வு நடந்த பிறகு பாதிக்கப்பட்டவரைத் தொடர்புகொள்வது, அவர்களுக்கு மருத்துவ உதவிகள் பெற உடன் செல்வது, நீண்ட கால ஆதரவு வழங்குவது போன்றவை தாமத தலையீட்டின் பகுதிகள். பல நேரத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த நீண்ட கால ஆதரவுதான் அதிக உதவியாக இருக்கிறது.

மொழியின் மூலம் பச்சைப் புள்ளிகள் உருவாக்குதல்

நமது மொழி பயன்பாடே ஒரு சக்தி வாய்ந்த பச்சைப் புள்ளியாக இருக்க முடியும். 'சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று சொல்வதற்கு பதிலாக 'நீ என்ன செய்ய விரும்புகிறாய்?' என்று கேட்பது பச்சைப் புள்ளி. 'காவல்துறை' என்று சொல்வதற்குப் பதிலாக, 'பாதுகாப்பான உதவி' என்று சொல்வது பச்சைப் புள்ளி. 'கவுன்சிலிங் கொடுக்கிறேன்' என்பதற்குப் பதிலாக, 'ஒரு நண்பனாகப் பேசலாம்' என்று சொல்வது பச்சைப் புள்ளி. 'நிரூபணம் காட்டு' என்பதற்குப் பதிலாக, 'உன் அனுபவம் மதிப்புமிக்கது' என்று சொல்வது பச்சைப் புள்ளி.

இந்த மொழி மாற்றங்கள் சிறியதாகத் தோன்றலாம், ஆனால், இவை பாதிக்கப்பட்டவர்களின் மனநிலையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்துகின்றன. அவர்கள் பயம் இல்லாமல் நம்மை அணுக முடிகிறது. அவர்களின் அனுபவம் நம்பப்படுகிறது என்கிற உணர்வு வருகிறது. அவர்களே தங்கள் தேர்வுகளை எடுக்க முடிகிறது.

கதை சொல்லும் முறையும் ஒரு பச்சைப் புள்ளிதான். 'இது செய்யுங்கள், அது செய்யுங்கள்' என்று பட்டியல் கொடுப்பதற்குப் பதிலாக, 'என் நண்பன் ராம் இப்படி ஒரு சூழ்நிலையில் இருந்தான். நாங்கள் அவனுக்கு இப்படி உதவினோம். அவன் இன்று நன்றாக இருக்கிறான்' என்று உதாரணங்கள் மூலம் சொல்வது நம்பிக்கையை ஏற்படுத்துகிறது. அவர்களுக்கும் உதவி கிடைக்கும் என்கிற நம்பிக்கை வருகிறது.

### சமூக மாற்றத்தின் நீண்ட கால நோக்கம்

புசநநெனுழவ கோட்பாட்டின் நீண்ட கால நோக்கம் மிகவும் விரிவானது. இது வெறும் தனிப்பட்ட உதவிகளைத் தாண்டி, சமூகத்தின் அடிப்படையான மனப்போக்கையே மாற்ற விரும்புகிறது. நிறுவன மட்டத்தில் பல மாற்றங்கள் தேவைப்படுகின்றன. பாதுகாப்பான புகார் அளிக்கும் முறைமைகள், வெளிப்படையான கொள்கைகள் மற்றும் தண்டனைகள், வன்முறை தடுப்புப் பயிற்சி திட்டங்கள் போன்றவை அவசியம். ஆனால், இவற்றைக் காட்டிலும் முக்கியமானது கலாச்சார மாற்றம்.

கேளிக்கைத் துறையில், 'கலைஞரின் தனிப்பட்ட நடத்தையும் அவரின் கலையும் தனித்தனியே பார்க்க முடியாது' என்கிற விழிப்புணர்வு வர வேண்டும். அதிகாரம் உள்ளவர்களின் பொறுப்புணர்வை வலியுறுத்த வேண்டும். பாதிக்கப்பட்டவர்களின் குரலுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். 'நிரூபணம்' கேட்பதற்குப் பதிலாக 'நம்பிக்கை' கொடுக்க வேண்டும்.

இந்த மாற்றம் ஒரே நாளில் நடக்காது. ஆனால், ஒவ்வொரு பச்சைப் புள்ளியும் மற்றொரு பச்சைப் புள்ளியை உருவாக்குகிறது. ஒருவர் வன்முறையை எதிர்த்துப் பேசும் போது, அது அவரைச் சுற்றியுள்ளவர்களுக்கு ஒரு செய்தியை அனுப்புகிறது. வன்முறை ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல என்கிற செய்தி. ஒருவர் பாதிக்கப்பட்டவரை நம்பும் போது, அது அந்த நபருக்கு நம்பிக்கையைத் தருவதோடு, மற்றவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக இருக்கிறது.

சமூக மாற்றத்தின் இறுதி இலக்கு என்னவென்றால், வன்முறையை எதிர்க்கும் சமூகம், பாதிக்கப்பட்டவர்களை நம்பும் சமூகம், அதிகாரம் கொண்டவர்களைப் பொறுப்புக் கூற வைக்கும் சமூகம் உருவாக்குவதுதான். அப்படிப்பட்ட சமூகத்தில் சிவப்புப் புள்ளிகள் குறைய ஆரம்பிக்கும். கறுப்புப் புள்ளிகள் மறைய ஆரம்பிக்கும். பச்சைப் புள்ளிகள் பெருகும்.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.06.2025 வெளியிடப்பெற்றது.